தொகுதி XIII இதழ் II

# சிந்தனை

ஆசிரியர்.
சோமேசசுந்தரி - கிருஷ்ணகுமார்

கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்,
இலங்கை
ஜூலை 2000
வெளியீடு 2003

# யாழ்ப்பாணத்துப் புனைகதைகளில் சைவம்

கலாநிதி.ம.இரகுநாதன்.

மேற்கு நாட்டவரின் வருகையைத் தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையிலும் இந்தியாவிலும் ஏற்பட்ட பாரம்பரிய சமூக அமைப்பின் சிதைவுகளினாலும் பிரித்தானிய ஆட்சியினர் அறிமுகப்படுத்திய ஆங்கிலக் கல்வியினாலும் புதிய மேலை நாட்டு இலக்கியங்களின் அறிமுகத்தினாலும் தமிழில் வந்து சேர்ந்த புதியதொரு இலக்கிய வடிமே புனைகதை ஆகும்.

ஈழத்தில் 1885இல் அசன்பேயுடைய கதையுடன் தொடங்கிய புனைகதை இலக்கியங்கள் ஆரம்பத்தில் திகைப்பூட்டும் நூதன சாகஸங்கள் நிறைந்த மர்மப் பண்புவாய்ந்த கதைகளாகவே அமைந்தன. இவை ஈழத்து மண்ணையும் மக்களையும் பொருளாகக் கொண்டனவாக அமையவில்லை. ஈழத்துத் தமிழ் மக்களது சமுதாயப் பிரச்சினைகளைப் பொருளாகக் கொண்டு புனைகதை எழுதும் பண்பு இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலேயே ஆரம்பித்தது 1914இல் வெளிவந்த மங்கள நாயகம்-தம்பையாவின் நொறுங்குண்ட இருதயம்[1] என்னும் நாவலில் இப்பண்பின் தொடக்க நிலையினைக் காணலாம்.

1802இல் ஈழம் ஆங்கிலேயரது குடியேற்ற நாடானதைத் தொடர்ந்து ஈழத்திற்கு வருகைதந்த கிறிஸ்தவ மிஷனரி இயக்கங்கள் தமது மதத்தைப் பரப்பும் பணியில் முனைப்புடன் செயற்பட்டன. சைவத்தைப் பிரதான சமயமாகக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்துத் தமிழர் மத்தியில் கணிசமான தொகையினரை கிறிஸ்தவ மிஷனரி இயக்கங்கள் தமது மதத்திற்கு மாறச் செய்வதில் வெற்றிகண்டன. யாழ்ப்பாணத்துச் சைவ உயர் குடியினருள் பலரும் கிறிஸ்தவ மிஷனரிகளால் மதமாற்றம் செய்யப்பட்டதைக் கண்டு யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலர் முதலியோர் ஆத்திரமுற்று கிறிஸ்தவத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டனர். இதனால் சைவத்திற்கும் கிறிஸ்தவத்திற்குமிடையே ஒருவிதமான போட்டி நிலை உருவாகியது.

சைவத்திற்கும் கிறிஸ்தவத்திற்குமிடையே நிகழ்ந்த போட்டியினால் இக்காலச் சமூக உணர்வு சமயம் சார்ந்ததாகவே இருந்தது. இவ்வுணர்வே பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை நெறிப்படுத்தும் உந்து சக்தியாகவும் திகழ்ந்தது. ஏறத்தாள இருபதாம் நூற்றாண்டின் முதல் நாற்பது ஆண்டுக்கால ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியத்தின் தன்மை இதனையே காட்டுகின்றது.

இத்தகைய சூழலில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்ட யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்கத்தினர் தமது மத விசுவாசத்தை வெளிக்காட்டவும் பிரசார நோக்கிலும் கிறிஸ்தவ மதம் சார்பான புனைகதைகளைப் படைத்தனர். நொறுங்குண்ட இருதயம் என்னும் நாவலில் அதன் ஆசிரியை மங்கள நாயகம் தம்பையா கூறும் வாக்கு மூலம் இதற்குத் தக்க சான்றாகும்.

> "சன்மார்க்க சீவியத்தின் மாட்சிமையை உபதேசத்தால் விளக்குவதிலும் உதாரணங்களால் உணர்த்துவது மிகவும் நன்மை பயத்தற்கேதுவாகுமென்றெண்ணி இக்கதையை எழுதத் துணிந்தேன்."[2]

இக் கூற்று ஆசிரியருக்கு கிறிஸ்தவ மதத்தில் இருந்த விசுவாசத்தையும் அதனை

மற்றவர்களுக்கு உணர்த்த வேண்டும் என அவர் விரும்புவதையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

நாவலில் கணவனால் கொடுமைப் படுத்தப்பட்ட கண்மணி என்னும் பாத்திரம் மனமுடைந்த நிலையில் கிறிஸ்தவ பாதிரியாரொருவரின் போதனைகளால் அமைதி பெறுவதும், கிறிஸ்தவ மதத்தைத் தழுவி ஒழுகும் கண்மணியின் நற்பண்புகளை உணர்ந்த கணவன் இறுதி நேரத்தில் தனது தவறை உணர்ந்து திருந்தி வாழ்வதும் காட்டப்படுகின்றன.

யாழ்ப்பாணத்து மத்திய தரவர்க்கத்தினரில் ஒரு பகுதியினரின் மன நிலையில் கிறிஸ்தவ மதத்திற்கு இருந்த உயர்வான இடம் இந் நாவலினூடே புலப்படுகின்றது. கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்கத்தினர் மதப் பிரசார நோக்கில் புனைகதைகளை வெளியிட்ட போது இவர்களுக்கு எதிராக சைவ சமயத்தினரும் புனைகதைகளை எழுத முற்பட்டனர். இந்த வகையில் இந்து சாதனம் பத்திரிகையின் ஆசிரியராகவும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியராகவும் இருந்த மரபுவழிச் சைவத் தமிழறிஞரான ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை சைவத்திற்கு ஆதரவான தனது கருத்துக்களைப் புனைகதையினூடாகக் கூற முற்பட்டார். இவர் எழுதிய மூன்று நாவல்களில் காசிநாதன்-நேசமலர்[3], கோபால நேசரத்தினம்[4] ஆகிய இரு நாவல்களும் சைவம் சார்ந்த பிரசாரத் தன்மை கொண்டனவாகவே அமைந்துள்ளன.

காசிநாதன்-நேசமலர் என்ற நாவலில் மானிப்பாயைச் சேர்ந்த நேசமலரின் கணவனான காசிநாதன் தனது மனைவியைப் புறக்கணித்துவிட்டு கண்டியிலுள்ள கிறிஸ்தவ மதபோதகர் நல்லதம்பியின் மகள் எதெல் ஜோதிமதியிடம் காதல் கொண்டு அவளோடு வாழ்கின்றான். நேசமலர் கணவனைத் தேடிச் சென்று கதிர்காமக் கந்தனின் அருளால் அவனை அடைகின்றாள். கிறிஸ்தவ சமயப் பிரசார முயற்சிகள் சைவக் குடும்பங்களில் ஏற்படுத்திய தாக்கத்தை உணர்த்தும் வகையில் எழுதப்பட்ட இக் கதைகளில் ஆசிரியரின் முருக பத்தி விஞ்சி நிற்பதை நா.சுப்பிரமணியன் சுட்டிக்காட்டியுள்ளார்.[5]

ஆசிரியரின் மற்றொரு நாவலான கோபால நேசரத்தினத்தில் சிறுவயதிலேயே தந்தையை இழந்த சைவக் குடும்பத்துச் சிறுவனான கோபாலனின் வாழ்வில் கிறிஸ்தவச் சூழல் விளைவித்த தாக்கங்களை எடுத்துக் காட்டி சைவ வாழ்வின் மேன்மை புலப்படுத்தப்படுகின்றது.

கிறிஸ்தவப் பாடசாலையில் கல்வி கற்ற கோபாலனின் திறமையைக் கண்ட பாதிரியாரும் போதகரும் அவனை மதம் மாற்ற முயற்சிக்கின்றனர். இந் நோக்கத்திற்காக குட்டித்தம்பிப் போதகர் இளம் விதவையான தனது மகள் நேசரத்தினத்துடன் அவனைப் பழக விடுகின்றார். அவளின் நடையுடை பாவனைகளால் கவரப்பட்ட கோபாலன் அவளைக் காதலிக்கும் நிலை ஏற்படுகின்றது. அவனை மதம் மாற்றும் திட்டத்தின் முதற்படியாக போதகர் இதனையே எதிர்பார்த்திருந்தார். ஆனால் விளைவு வேறு விதமாக அமைந்துவிடுகின்றது. சைவப் பற்றில் உறுதியாக இருந்த கோபாலனின் தாய் அவன் மதம் மாறுவதை அனுமதிக்கவேயில்லை. முடிவில் நேசரத்தினம் சைவத்திற்கு மாறி கோபாலனை மணம் முடிக்கின்றாள். இதனால் போதகரின் பதவியும் பறிக்கப்படுகின்றது.

கல்வி வசதிகளற்ற சூழ்நிலையில் கிறிஸ்தவப் பாடசாலைகளுக்குச் செல்லும் சைவக் குடும்ப ஏழைச் சிறுவர்களை மதம் மாற்ற முயலும் கிறிஸ்தவ மிஷனரிகளின் போக்கைக் கண்டிப்பதற்காக எழுந்த இந் நாவல் சமயப் போட்டி நிலவிய சூழலில் சைவத்தின் சிறப்பை உணர்த்துவதாகவும் அமைந்து விடுகின்றது.

சைவ-கிறிஸ்தவ மதங்களுக்கிடையேயான சமயப் போட்டி நிலவிய சூழலில் புனை கதையாசிரியர்கள் சமூகப் பிரச்சினைகளைச் சமய அறவியல் நோக்கிலேயே அணுகினர். இச் சூழல் மாற்றம் பெற்றபோது புனைகதைகளின் போக்கும் மாறியது. இத்தகைய நிலையிலும் ஒரு சில படைப்பாளிகள் தாம் வாழும் சமூகத்தையும் பிரதேச பண்பாட்டுணர்வு களையும் கருத்திற் கொண்டு புனைகதைகளை எழுத ஆரம்பித்தனர். இவர்களின் படைப்புகளில் சைவம் பிரதேச பண்பாட்டமிசமாக ஆவணப்படுத்தப்படுவதையே காணமுடிகின்றது. சான்றாக 1953 இல் வெளிவந்த கனக-செந்திநாதனின் விதியின் கை[6] என்ற நாவலில் புலப்படும் சைவத்தின் தன்மையைக் கூறலாம். இந்நாவலில் யாழ்ப்பாணத்திலுள்ள மருதஞ்சேரி என்னும் கற்பனைக் கிராமத்தினைக் களமாகக் கொண்டு இங்குள்ள சைவ உயர்சாதிப் பணக்காரக் குடும்பங்களுக்கிடையில் நிகழும் போட்டி மனப்பான்மைகளும் சச்சரவுகளும் எவ்வாறு சமூக நலனுக்குக் குந்தகமாக அமைகின்றன என்பது சித்திரிக்கப்படுகின்றது.

கதையில் கிராமத்து சமூக பாட்டமிசங்களைச் சித்திரிக்க முற்படும் ஆசிரியர் செல்வச் சந்நிதி முருகனின் உற்சவத்தையும் அதன் பொருட்டாக நடைபெறும் காவடி ஆட்டத்தையும் காட்டும்போது பக்தி ரசம் ததும்புகின்றது.

"கையில் வேலுடைய ஐயன், அன்பர் வினையுடையவே மிதிக்கும் காலுடைய கந்தன், உப்பாற்றங்கரையிலே செல்வச் சந்நிதியிலே வீற்றிருந்தருளி, ஆவணி மாதத்துப் பூரணைத் திருநாளிலே பவனிவரும் காட்சியை யாழ்ப்பாணத்துப் பக்த கோடிகள் கண்ணாரக் கண்டு, வாயாரப் பாடி, மனமார வணங்கும் கோலத்தை என்னென்றுரைப்பது. சுற்றுவட்டாரக் கிராமங்களில் இருந்து 'கை புனைந்தியற்றிடுங் காவடி எடுத்து நிகரில் கீதம் நேர்படவியல அதற்கிணை மத்தளம் அதிர்ந்து முழங்க அளவில் அனுபவத் தண்ணாவிதாளம் அமைவுறப் போடும் அவதிக் கிணையாய்' ஆடும் தாளக் காவடியும், தேர்க் காவடியும், செடில்காவடியும், கரகமும் பார்க்கப் பதினாயிரம் கண்ணுக்கு நாமெங்கே போவது?"[7]

பக்தி பூர்வமாகக் காட்டப்பட்ட காவடி ஆட்டம் சமூகத்தில் வகிக்கின்ற இடம் முக்கியமானது. ஆண்டுதோறும் ஞானவைரவர் கோயிலில் இருந்தே காவடி எடுக்க ஆரம்பிப்பது வழக்கம். அத்துடன் காவடி ஆடும் குழுவினர் முதலில் கோயில் மணியகாரனான பொன்னம்பலவாணரின் வீட்டில் மரியாதைக்காக ஆடுவதும் வழக்கம். இந்த வழக்கத்தை அனுமதிக்க விரும்பாத சுப்பன் இறுதி நேரத்தில் தனது பிள்ளைகளைக் குழுவிலிருந்து விலக்கிக் கொள்கின்றான். முடிவில் வயிரவனின் குழுவும் சுப்பனின் குழுவும் தனித்தனியே ஆட முற்பட்டு கோயிலடியில் ஆட்டம் தொடங்கு முன்னரே கலகம் ஏற்பட்டுவிடுகின்றது.

கோயிலில் பொன்னம்பலவாணருக் கிருந்த தனியுரிமையினால் காவடி ஆடுபவர்களும் அவரை மதித்து அவரின் வீட்டில் ஆடிய பின்னரே ஏனைய இடங்களில் ஆட வேண்டும் என்பது பழைய நிலமானிய அமைப்பின் சிந்தனைகளிலொன்று. நிலமானிய அமைப்பின் தன்மைகள் முற்றாக மறைந்து போகாத ஒரு சமூக அமைப்பில் இம் மரபின் தாக்கம் காணப்படுவது இயல்பே. இங்கே சைவம் உயர்சாதியினரின் சமூக அந்தஸ்தைப் பேணுவதற்குரிய ஒரு தளமாகவே காணப்படுவது தெரிகின்றது.

முற்போக்குச் சிந்தனைகள் வலுப்பெற்று புனைகதைகளில் சமூக மெய்ம்மையைத் தேடும் யதார்த்தச் சித்திரிப்பு இடம்பெற ஆரம்பித்த பின்னர், படைப்பாளிகள் சைவத்தை ஆழமான சமூகவியல் கண்ணோட்டத்துடன் அணுக முற்பட்டனர்.

வண்ணார் பண்ணையிலுள்ள ஒரு சலவைத் தொழிலாளர் குடும்பத்தை மையமாகக் கொண்டு புனையப்பட்ட செங்கை ஆழியானின் பிரளயம்[8] என்ற நாவலில் அடிமை-குடிமை வர்க்கத்தினருக்கும் உயர் சாதியினருக்குமிடையே அவர்களின் சமூக அந்தஸ்தை நிர்ணயிக்கும் அமைப்பாகவே சைவம் விளங்குவது சித்திரிக்கப்படுகின்றது. வண்ணார் பண்ணை அம்மன் கோயிலில் நடைபெறும் திருவிழாவின் சாதியடிப்படை நாவலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

> "ஆடி மாதத்தில் அம்மன் கோயில் திருவிழா ஆரம்பமாகிவிடும். பத்து நாட்கள் பகலும் இரவும் திருவிழாக்கள் கோலாகலமாக நடக்கம். மேளக் கச்சேரிகளும் சதிர்க் கச்சேரிகளும், கதாப்பிரசங்கங்களுமாகத் திருவிழா விடிய விடிய நடக்கும்.
>
> ஒவ்வொரு நாள் திருவிழாவையும் கலட்டியின் ஒவ்வொரு பிரிவினர் செய்து வந்தார்கள். வேளாளருக்குள்ளேயே சில பிரிவுகள் இருந்தன. குடக்கர் பகுதி, செம்பாட்டார் பகுதி, பொலிசார் பகுதி, ஓவசியர் பகுதி எனச் சில பிரிவுகள். இவர்கள் ஒவ்வொரு திருவிழாவைப் போட்டியாகச் செய்தனர். அதுமட்டுமன்றி தண்டிகைத் திருவிழா நளவர் என்ற குடிமக்கள் செய்யும் விழாவாகவும் குதிரை வாகனத் திருவிழா வண்ணார் என்ற குடிமக்கள் செய்யும் விழா்வா்கவும் இருந்தது."[9]

இங்கே சாதிக்கொரு திருவிழாவாக மட்டுமன்றி சாதிக்குள் சாதியாக உள்ள உட்பிரிவினருக்கும் தனித்தனியே திருவிழா வழங்கப்பட்டு அவர்களின் தனித்தன்மை உறுதிப்படுத்தப்படுவது தெரிகின்றது.

சாதிப்பிரிவினைகளை வலுவாகப் பேணும் நோக்கத்துடன் சாதிக்கொரு திருவிழாவாகப் பிரித்தாலும் குடிமக்களின் திருவிழா உயர்சாதியினரின் திருவிழாவைவிட உயர்வானதாக இருக்கக்கூடாது என்ற மனநிலை உயர்சாதியினரிடம் இருந்தது. இதனாலேயே வண்ணார் என்ற குடிமக்கள் செய்த ஆறாந் திருவிழா ஆறு சிகரங்கள் அமைத்து குலை வாழைகளை ஏராளமாகக் கட்டி மிகவும் அலங்காரமாக இருந்ததைக் கண்ட உயர்சாதியினர் திருவிழாவில் குழப்பத்தை ஏற்படுத்தியதுடன்.

> "இனி உங்களுக்கு ஒரு திருவிழாவோ? அது சரிவராது"
> "இது எங்கடை கோயில் இனிமேல் திருவிழாவுமில்லை கோதாரியுமில்லை கழட்டுங்கடா சிகரங்களையெல்லாம்"[10]

எனக் கூறுவது சைவம் சாதி அந்தஸ்தைப் பேணுவதற்குரிய தளமாகப் பயன்படுத்தப் பட்டதையே காட்டுகின்றது.

முற்போக்கு எண்ணங் கொண்ட இளைஞர்கள் சிலரிடமிருந்து

> "கோயில் ஊர்ச்சொத்து.. அதிலை திருவிழாச் செய்யிறதை மறிக்க நீங்கள் யார்?"[11]

என்ற குரல் எழுந்தாலும் அது பலங்கொண்டதாக அமையக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லை.

கோயிலில் வழிபடுவதற்குக்கூட உரிமைகள் மறுக்கப்படும் நிலையில் மக்களுக்கு மதத்தின் மீதும் கோயிலின் மீதும் இருந்த பற்று கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது. இதனாலேயே அம்மனுக்காக உண்டியலில் சேர்த்துவைத்த பணத்தை வெள்ளப் பெருக்கால் வீடுவாசல்களை இழந்து அவலப்பட்ட மக்களின் துயர் துடைப்பு நிதிக்காக ராணி வழங்குகின்றாள். ராணியின் செயற்பாடு கோயிலின் மீது அவளுக்கிருந்த பற்று கேள்விக்குள்ளாக்கப் பட்டதையே எடுத்துக் காட்டுகின்றது.

முற்போக்கு அணியைச் சார்ந்த மற்றொரு படைப்பாளியான செ.கணேசலிங்கன், சைவத்தின் கதவுகள் தாழ்த்தப்பட்ட

மக்களுக்கு அடைக்கப்பட்டதையும் அவர்கள் அதற்கெதிராகப் போராடியதையும் எடுத்துக் காட்டியுள்ளார். போர்க்கோலம் [12] என்ற நாவலில் ஆலயத்தினுள் வழிபடுவதற்காகப் பிரவேசிக்க முற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கட் கூட்டத்தை உயர் சாதியினர் எதிர்ப்பதையும் இதனால் கலகம் மூண்டு பொலிசாரின் தலையீட்டால் கோயிற் கதவு பூட்டப்படுவதும் எடுத்துக் காட்டப்படுகின்றது. இத்தகைய சந்தர்ப்பத்தில் பொலிசார் உயர் சாதியினரின் பிரதிநிதிகளாகவே செயற்படுவதை செ.கணேசலிங்கன் சுட்டிக்காட்டுகின்றார்.

> ''தனிப்பட்டவர்களின் கோவில்களில் தாழ்த்தப்பட்டவர் நுழைவதை கோவிற் பூசாரிகள் தடுத்தால் தாம் தலையிட சட்ட அதிகாரம் போதாது என்று பொலிசார் சொல்லிவிட்டு உயர்ந்த சாதிக்காரர் பக்கமாகவே நின்றனர்."[13]

எனக் கூறும் செ.கணேசலிங்கன் இதனால் சாதி ஒழிப்பு வெகுஜன இயக்கங்கள் தோற்றம் பெற்று

> "உயர்சாதி வெறியர்களால் சிறையாகி இருக்கும் தெய்வங்களுக்கு விடுதலை அளிக்க வேண்டும். கோயிற் பூட்டுக்களெல்லாம் உடைக்கப்பட வேண்டும்."[14]

என்ற குரல் மேலெழுவதையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

சைவக் கோயில்களில் உயர் சாதியினர் தாழ்த்தப்பட்ட மக்களை மட்டுமன்றி பூசகர்களாக இருந்த பிராமணர்களையும் அடக்கியாள்வதை தெணியானின் மரக் கொக்கு [15] என்ற நாவல் எடுத்துக் காட்டுகின்றது. இந்நாவலில் வருகின்ற பிரதான பாத்திரமான விஜயலட்சுமி நிலவுடைமை வர்க்கத்தின் பிரதிநிதி; கோயிலின் சொந்தக்காரி; அவள் உதயகாலப் பூசைக்கு நேரம் பிந்தி வந்த பூசகரைக் கடிந்துகொள்வதைத் தெணியான் பின்வருமாறு சித்திரிக்கின்றார்.

> ''ஐயர், உதயகாலப்பூசை எத்தினை மணிக்கு நடக்க வேணும்?
> ஐயர் மௌனமாக நிற்கிறார்.
> வழிபாட்டுக்கு வந்த சிலர் இந்த விசாரணைகளைக் கவனித்துக் கொண்டு விலகி நிற்கின்றார்கள். அவள் ஐயரை விடுவதாக இல்லை.
> "ஐயர் சொல்லும்"
> ''ஆறு மணிக்கு...''ஐயரின் குரல் தளதளக்கிறது.
> "ஆறு மணிக்கே இப்ப பூசை செய்தநீர்?"
> "....................................."
> "என்ன பேசாமல் நிற்கிறீர்......!"
> "நீர் உம்மட நேரத்துக்குப் பூசை செய்கிற இடமல்ல இது....நீர் இப்பிடித்தான் மற்றக் காரியங்களும் பாக்கிறீர்! இஞ்சை ஆரும் உங்கடை எண்ணப்படி நடக்கேலாது. இன்றைக்கு மன்னிச்சு விடுகிறன் இதுதான் கடைசிமுறை. இனிமேல் இப்பிடி நடந்தீரெண்டால் நீர் இந்தக் கோயிலை விட்டுப் போகவேண்டியதுதான்....."[16]

இங்கு விஜயலட்சுமியின் முன் கூனிக் குறுகி நிற்கும் பூசகரைப் பார்க்கும்போது யாழ்ப்பாணத்துச் சைவம் பூசகர்களைச் சாத்திய கதவினுள் சிறைவைத்திருப்பது தெளிவாகத் தெரிகின்றது.

மேலும் வருடாந்த உற்சவத்தன்று ஆலயப் பிரவேசம் செய்யத் திட்டமிட்ட தாழ்த்தப்பட்ட சாதியினரின் திட்டத்தை முறியடிக்க உயர்சாதியினர் திட்டம் தீட்டும்போது "சாதி பெரிதா! சமயம் பெரிதா! சமயமென்ன சாதிதான் பெரிது. சாதியைப் பாதுகாப்பதற்காகவே சமயத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டியிருக்கின்றது."17 என்று உயர்சாதியினர் கூறுவதாக தெணியான் சித்திரிக்கின்றார். இது யாழ்ப்பாணத்தில் சைவம் உயர்சாதியனரின் அந்தஸ்தைப் பேணுவதற்கான தளமாகப் பயன்படுவதையே எடுத்துக் காட்டுகின்றது.

யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்பிலே பிராமணர்களின் நிலைபற்றிக்கூறும் பேராசிரியர் கா.சிவத்தம்பி,

"பிராமணர்கள் யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பில் அதிகார மேன்மையுடைய வர்களாக இருக்கவில்லை. தமிழ் நாட்டின் சமூக அமைப்புக்கும் யாழ்ப்பாணத்துச் சாதியமைப்புக்குமுள்ள முக்கிய வேறுபாடு இதுவாகும். தமிழ் நாட்டைப்போன்று யாழ்ப்பாணத்திற் பிராமணர் நிலச் சொந்தக்காரர்களாக விளங்கவில்லை. யாழ்ப்பாணத்துப் பிராமணர் பெரும்பாலும் புரோகித வாழ்க்கையை மேற்கொண்டிருந்தமையே இதற்குக் காரணமாகும்."18

என பிராமணர்கள் நிலவுடைமையாளரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு வாழும் நிலையை எடுத்துக் காட்டியுள்ளார். இக்கருத்தை இலக்கியமாக்கி அவர்களின் வாழ்வின் சோகங்களை இலக்கியத்தினூடாகச் சித்திரித்தனர் புனைகதையாளர்கள். இந்த வகையில் தெணியானின் பொற்சிறையில் வாடும் புனிதர்கள்,[19] சோமகாந்தனின் விடிவெள்ளி பூத்தது,[20] ஆகிய இரு நாவல்களும் குறிப்பிடக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த படைப்புக்களாகும்.

தெணியானின் நாவலில் யாழ்ப்பாணத்துப் பிராமணக் குடும்பம் ஒன்றின் சோகவாழ்வு சித்திரிக்கப்படுகின்றது. வேகமாக மாறிவருகின்ற சமூகச் சூழலிலும் இப் பிராமணர்கள் மாறாதுள்ள மத நியமங்களைப் பேணி வருமாறு சமூகத்தால் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதனால் புதிய சமூக வாழ்வுக்கும் பாரம்பரிய சமய வாழ்வுக்கும் இடையே இருதலைக் கொள்ளி எறும்பாக இவர்களின் வாழ்வு அமைந்திருப்பதை இந்நாவல் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

பள்ளிப் படிப்பில் திறமைசாலியாக இருந்த கோயிற் பூசகரின் மகனை உயர்கல்விக்காக வேதப் பள்ளிக்கு அனுப்புவதை ஆசாரம் கெட்டுவிடும் எனக் கூறி ஊரவர்கள் எதிர்க்கின்றனர்.[21] கோயிற் பூசை உரியகாலத்தில் நடைபெறவேண்டும் என்ற மணியகாரனின் கட்டளைக்காக இறந்த பிள்ளையைச் சாக்கால் மூடி மறைத்து வைத்துவிட்டுக் கோயிற் பூசைக்குச் செல்கின்றார் நல்லூர் ஐயர்.[22] இத்தகைய சம்பவங்கள் பிராமணரின் அடக்கி ஒடுக்கப்படும் நிலையை மட்டுமன்றிச் சைவத்தின் நிலையையும் எடுத்துக் காட்டுகின்றன.

இத்தகைய சிறை வாழ்வை விரும்பாத புதிய தலைமுறையைச் சேர்ந்தவளான ஜமுனா, கோயிற் பூசகராக இருக்கும் தன் மகனுக்கு மனைவியாக்கி, மோதகமும் வடையும் தயாரித்துக் கொண்டு சிறைவாசம் செய்யும் அடிமை வாழ்வுக்குள் தன்னை இழுத்துவிட எண்ணும் அத்தையை வெறுக்கிறாள்.[23] மாறிவருகின்ற சமுதாயத்தின் புதிய சிந்தனைப் போக்கால் கவரப்பட்ட பாலன் புரோகிதத் தொழிலைக் கட்டிக்காக்க விரும்பும் தனது சகோதரன் கோபிக்கு,

"நாங்கள் கிரியைகள் செய்யிறபோதும், கோயிலுக்குள்ளேயும் பெரியவர்களாகவும் புனிதமானவர்களாகவும் காட்டப்பட்டு ஏமாற்றப்படுகிறம், சுரண்டப்படுகிறம், கோயில் எங்களுக்கொரு பொற்சிறை. யாழ்ப்பாணத்திலை சடங்காசாரங்களிலைதான் பிராமணன் பெரியவன், சமூகத்திலை பிராமணன் பெரியவனில்லை, சொத்துடைமையுள்ளவன் தான் பெரியவன். சமூகத்திலை ஒடுக்கு முறைகளைப் பாதுகாக்கும் காவல் அரண்களாக இண்டைக்கும் கோயில்களை வைச்சிருக்கினம். ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் மக்களைக் கோயிலுக்குள்ளே வரவேண்டாமென்று ஒருவவேளை தடுக்கலாம். அவையின்ரை சொந்த வாழ்க்கையில இண்டைக்கிவை தலையிடேலாது. ஆனால் கோயில் பிராமணன்ரை தனிப்பட்ட வாழ்க்கையிலை இண்டைக்கும் தலையிட்டு அதிகாரம் பண்ணுகினம் தெய்வீகத்தோடை பிராமணனைத் தொடர்புபடுத்தி சராசரி மனித வாழ்வைக்கூட மறுக்கினம். பிராமணன் புனிதமான ஒரு

அடிமையாகத் தான் கணிக்கப்படுகிறான்."[24] எனக்கூறுகிறான். இது யாழ்ப்பாணத்தில் சைவம் உயர் சாதியினரின நலன்களைப் பேணும் தளமாகச் செயற்படுவதையே எடுத்துக் காட்டுகின்றது.

சோமகாந்தனின் விடிவெள்ளி பூத்தது என்ற நாவலில் கோயிற் குருக்களின் மகன் உயர்கல்வி கற்பதற்காக வேதப்பள்ளிக்குச் செல்வதை ஊரவர் எதிர்ப்பது எடுத்துக் காட்டப்படுகிறது. மேலும் பிராமணர்களின் வாழ்வு ஊரை நம்பிய வாழ்வாகவே இருப்பதால் இவர்கள் தமது வயிற்றுப் பிழைப்புக்காகக் கோயிற் கிரியைகள் செய்தே ஆக வேண்டிய நிலை இருப்பதும், கிரியை செய்பவர்கள் தாரம் இழந்தவர்களாக இருக்கக்கூடாது என்பதால் தாரம் இழந்தவர்கள் கிழட்டு வயதிலும் இளம் பெண்களை மறுமணம் செய்வதும் எடுத்துக் காட்டப்பட்டு அவர்களின் வாழ்வு அசிங்கமான வாழ்வாகச் சித்திரிக்கப்படுகின்றது.

"உள்வளைந்த உடம்பு, ஊதிப் பெருத்த வயிறு, வழுக்கை விழுந்த உச்சந் தலையில் எஞ்சி நரைத்த முடிகளை இழுத்துச் செருகிய கூர்ச்சக் குடுமி, பார்வை மங்கிவிட்ட கண்களைக் கூர்மைப்படுத்த ஒடிந்துவிட்ட மெல்லிய கம்பி பிரேமுக்குப் பதிலாக நூலால் இழுத்துக் கட்டிய மூக்குக் கண்ணாடி. மேல் வரிசை நடுப்பற்களும் கொடுப்புப் பற்களும் கழன்றுவிட்டவாய், இருந்து எழும்பவே மூச்சிரைக்கிற வயசில்.. இரண்டாந் தாரமாகக் கூட, தாரமிழந்த கையோடு தொடர்ந்தும் சிவாசாரியாராக உற்சவங்களை நடத்த வேண்டுமென்று கூறிக்கொண்டு இந்தியாவுக்குப் போய் பெற்றோருக்கு இருநூறும் முந்நூறும் கொடுத்து தமது புதல்வருக்கு முடித்து வைப்பதற்கெனப் பொய்சொல்லி பதினேழு, பதினெட்டு வயசுப் பிராமணப் பெட்டைகளைக் கூட்டிக்கொண்டுவந்து மறுதாரம் முடித்துக்கொண்டு அசிங்க வாழ்க்கை நடத்துகிற ஜாதியாக அவர்களை யாழ்ப்பாணத்திலே ஆக்கிவிட்டது போலும்..."[25]

சோமகாந்தனின் இச் சித்திரிப்பு சற்று மிகையாகத் தோன்றினாலும் ஊரை நம்பிய வாழ்வின் சோகமும் கொடுமையும் இங்கே தெளிவாக உணர்த்தப்படுகிறது.

அடுத்து யாழ்ப்பாணத்துச் சைவ வழிபாட்டு மரபில் சிறுதெய்வ வழிபாட்டு மரபும் குறிப்பிடக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பொதுவாக பெருந்தெய்வ வழிபாட்டு மரபு உயர் பண்பாட்டுடன் இணைந்ததாக இருக்க சிறு தெய்வ வழிபாட்டு மரபு அதற்குப் புறம்பானதாகவே இருந்து வந்தது வழக்கம். ஆனால் உயர் பண்பாடு காலத்திற்குக் காலம் தனது எல்லையை விரித்து சிறு பண்பாட்டிலிருந்து சிலவற்றைத் தன்னோடு இணைத்துக் கொள்வதும் வழக்கம். இந்த வகையிலேயே அம்மன் வழிபாடு உயர் பண்பாட்டால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. உயர் பண்பாட்டினுள் உள்வாங்கப்படாத சிறு தெய்வ வழிபாட்டுக் கூறுகள் பல இன்னும் உயர்ந்த சாதியல்லாத பிறரிடமே காணப்படுகின்றது. இந்த வகையில் வண்ணார் பண்ணையிலுள்ள பெரியதம்பிரானுக்கு வைகாசியில் பறைமேளம் முழங்க நடைபெறும் பொங்கல் விழா வண்ணார் என்ற குடிமக்களுக்குரியதாகவே இருப்பதையும் கலட்டியிலுள்ள மாரியம்மன் வழிபாட்டில் பிரதேச மக்கள் அனைவரும் இணைந்து சாதிக்கொரு திருவிழாவாகவே நடாத்துவதையும் செங்கை ஆழியானின் பிரளயம் என்னும் நாவலினூடாக அறிய முடிகின்றது.

சிறுதெய்வ வழிபாட்டு மரபின் ஒரு கூறாக இருப்பது பேய்கள் தொடர்பான நம்பிக்கையாகும். இப் பேய்கள் மனிதர்கள் மீது தொற்றிக்கொள்ளும்போது அதனை விரட்டுவதற்கு பேய்களை வசப்படுத்தி வைத்துள்ள மந்திரவாதி ஒருவர் தேவைப்படுகின்றார். இத்தகைய வல்லமையுள்ள மந்திர வாதியாகச் செயற்படுபவர்கள் பெரும்பாலும் உயர்சாதியல்லாத மக்களாகவே இருக்கின்றனர். டானியலின் அடிமைகள்[26] என்ற நாவலில் நயினாத்திக்குப் பேய் பிடித்தபோது அதனை விரட்டுவதற்காக தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த கறுத்தானே

அழைக்கப்படுகின்றான்.

"நயினார் வீட்டு மாட்டுக் கொட்டிலுக்கு நடுவே கயித்தானும் அவனின் உதவியாள் பொன்னனும் கும்பம் வைத்து குடும்பத்துக்குப் பக்கவாட்டில், சாம்பல் மொந்தன் வாழைக் குட்டியையும் சுற்றி வண்ணக் கோடிட்டு வேப்பம் பத்தி கட்டி சாம்பிராணிகளைச் சேர்த்து, கதலி வாழைச் சீப்பொன்றைப் பிரித்து அதற்கு நாக்கு மூக்குத் தள்ளி......[27]

அமைக்கப்பட்ட இடத்தில் சின்ன நயினாத்தியை இருத்தி,

"ஊத்தை குடி வயிரவா ஓடியாடா!
உதிரமா காளியட்டை ஓடியாடா! [28]

என கயித்தான் மந்திர உச்சாடனம் செய்து-நயினாத்தியை ஆட்டுவித்து- கோழிச் சேவல் பலியிட்டு-அவளின்மீதிருந்த பேயை உச்சி மயிருக்கு அழைத்து-அதனை மயிரோடறிந்து சுடலையில் கழிப்புக் கழிக்கும் வரையான சடங்கு முறைகளை டானியல் விபரித்துள்ளார்.

அடுத்து யாழ்ப்பாணத்துச் சைவத்தின் மற்றொரு அம்சமாக விளங்குவது சமய விழாக்களையொட்டி நடைபெறும் போர்த் தேங்காய் அடித்தல், சேவல் சண்டை முதலிய போட்டிகள். டானியலின் அடிமைகள் என்ற நாவலில், சுட்டிபுரம் அம்மன் கோயிலில் நடைபெறும் பொங்கலையொட்டி சூரியரும், கயிலாயரும் போர்த்தேங்காய் உருட்டும் பங்கத்தை நடாத்துவது பற்றி விபரிக்கப்படுகின்றது. உயர் சாதியினரின் அந்தஸ்தை வெளிக்காட்ட நடைபெறும் இப் பங்கத்தில் அவர்களின் அடிமை குடிமைகளே தேங்காய் அடிகாரர்களாக விளங்குகின்றனர். அடிகாரர்களாக நிற்கும் ஐவரில் பஞ்சமன், கோவியன், தவசியன், சாண்டான், வேளாளன் என ஒவ்வொரு சாதியினர் நின்றாலும் ஒரு சாதிக்காரனுக்கு எதிராக இன்னொரு சாதிக்காரன் நிறுத்தப்படுவதில்லை என்றும் பங்கம் பார்க்க வந்தவர்களும் சாதி சாதியாகப் பிரிந்து நிற்பதாகவுமே டானியல் விபரித்துள்ளார்.

எஸ்.பொன்னுத்துரையின் நனவிடைத் தோய்தலில் சித்திரைப் புதுருடப் பிறப்பையொட்டி சேணிய தெரு மார்க்கண்டுத் தத்தியாருக்கும், மக்கிக் கிடங்கடி செல்லையா பகுதியாருக்கும் இடையே நடந்த போர்த் தேங்காய் அடி பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.[29]

வருடப் பிறப்பையொட்டி நடைபெறும் சேவலடிப் போரிலும் அடிமை குடிமைகளே பயன்படுத்தப்படுகின்றனர். போருக்கான சேவலைத் தெரிவு செய்து வளர்ப்பது முதல் அதனைக் களத்தில் நிறுத்தி நெறிப்படுத்துவது வரை அடிமை குடிமைகளே இதனைப் பொறுப்பேற்றுச் செய்து வருகின்றனர். முப்பது அடி நீளமான சதுரத்தில் எல்லைபோட்டு கயிற்று வடம் கட்டிப் பார்வையாளர்கள் அதற்கு அப்பால் நிற்க வரணி இராசாவின் தலைமையில் சூரிய சந்திரர்களின் சேவல்கள் மோதுவதை டானியல் சித்திரித்துள்ளார்.[30] நெறிப்படுத்துபவர்கள். ஒரே சாதியாக இருக்க வேண்டியதும் அவசியமாகும். சூரியரின் சேவலை அடிமை பண்டாரியனும் கயிலாயரின் சேவலை அடிமை சரக்கனும் நெறிப்படுத்துகின்றனர்.

## *முடிவுரை*

யாழ்ப்பாணத்துப் புனை கதைகளில் சைவ கிறிஸ்தவ மதங்களுக்கிடையே போட்டி நிலவிய காலத்தில் சைவம் பிரசார நோக்கில் உயர்வானதாகக் காட்டப்பட்டது. போட்டி நிலை தணிந்தபோது சைவம் உயர்சாதியினரின் சமூக அந்தஸ்தை நிலை நிறுத்தும் அதிகார மையமாகத் தொழிற்பட்டதைப் புனைகதைகள் எடுத்துக் காட்டின. உயர் சாதியினர், ஒரு பகுதி மக்களை அடிமைகளாக்கி கோயிற் கதவுகளுக்கு வெளியே நிறுத்தியதுடன் தமது பொழுது போக்குக்காக நடாத்தப்படும் விளையாட்டுக்களில் அவர்களைப் பலிக் கடாக்களாக்கி வேடிக்கை பார்த்தனர். உயர் சாதியினரின் கோரிக்கைக்காக தேங்காய் அடிகாரனாகவும், சேவலடிகாரனாகவும் பயன்படுத்தப்பட்ட அடிமை குடிமைகள்

சமூகத்தில் எந்தவித உரிமைகளும் இன்றி விலங்குகள் போல நடாத்தப்பட்டார்கள். உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் கோயிற் கதவுகளுக்கு வெளியே நின்ற இம் மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடினார்கள். ஆனால் சாத்திய கதவுகளுக்கு உள்ளே சிறைவக்கப்பட்ட பிராமணர்கள் தமது அடிமை நிலையை வெளியே சொல்லக் கூடமுடியாமல் இன்னும் தவிக்கின்றார்கள். எனவே யாழ்ப்பாணத்துச் சைவத்தின் நிலைப்பாட்டில் பக்தியைவிட சாதி பெரிது என்ற நிலையே இருந்து வந்துள்ளது தெரிகின்றது. சாதியபிமானத்தை வெளிப்படுத்தி சமூக அந்தஸ்தைப் பேணும் தளமாகவே சைவம் விளங்கி வந்திருப்பதை யாழ்ப்பாணத்துப் புனை கதைகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

***அடிக்குறிப்புக்கள்***

1. மங்களநாயகம். தம்பையா., நொறுங்குண்ட இருதயம், 1914, தெல்லிப்பழை.
2. மேலது. நூன்முகம்.
3. திருஞானசம்பந்தபிள்ளை, ம.வே., காசிநாதன் நேசமலர், 1929, யாழ்ப்பாணம்.
4. மேலது, கோபாலநேசரத்தினம், 1927, யாழ்ப்பாணம்.
5. சுப்பிரமணியம், நா., ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம், 1978, யாழ்ப்பாணம்.
6. கனக செந்திநாதன், விதியின்கை, 1977, கொழும்பு.
7. மேலது, ப.55-56
8. செங்கை ஆழியான், பிரளயம், 1989 இரண்டாம் பதிப்பு, யாழ்ப்பாணம்.
9. மேலது ப.36
10. மேலது ப.40
11. மேலது ப.40
12. கணேசலிங்கன், செ., போர்க்கோலம், 1969, சென்னை.
13. மேலது ப.125
14. மேலது ப.168
15. தெணியான், மரக்கொக்கு, 1994, நான்காவது பரிமாணம் வெளியீடு5, கொழும்பு.
16. மேலது ப.119
17. மேலது ப.138
18. சிவத்தம்பி, கா., ஈழத்தில் தமிழ் இலக்கியம், 1987, இரண்டாம் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, ப.207.
19. தெணியான், பொற்சிறையில் வாடும் புனிதர்கள், 1989, யாழ்ப்பாணம்.
20. சோமகாந்தன், விடிவெள்ளி பூத்தது, 1989, யாழ்ப்பாணம்.
21. தெணியான், மேலது, ப.8.
22. மேலது ப. 54-55
23. மேலது ப.31
24. மேலது ப. 112-113
25. சோமகாந்தன், மேலது, ப.72
26. டானியல், அடிமைகள், 1995, அலைகள் வெளியீட்டகம், சென்னை.
27. மேலது ப.107
28. மேலது ப. 109
29. பொன்னுத்துரை, எஸ்., நனவிடைத்தோய்தல், 1992, மித்ர வெளியீடு, சென்னை, ப.6.
30. டானியல், மேலது, ப.188.